**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

O.S.No. 72 /2015 **நாள்– 24.01.2024**

12 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.2 ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது ஏற்பாட்டின்படி கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | ஜாதி | |
| த–பெ | ஆறுமுகம் | சமயம் | |
| கிராமம் | இராஜபாளையம் | தொழில் | ஆசிரியர் |
| தாலுகா | இராஜபாளையம் | வயது | 60 |

**முதல் விசாரணை**

எனது முதல் விசாரணையை பொறுத்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.அ.வ.எண்13/1999 ல் பிறப்பிக்கப்பட்ட இறுதி நிலை தீர்ப்பாணை பதிவு நகல் **பிவாசாஆ–11.** 19.12.2013 அன்று 4 முதல் 7 பிரதிவாதிகள் 12 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் பதில் நகல் **பிவாசாஆ–12.** சர்வே எண் 110/2 ல் டவுண் சர்வே ரிஜிஸ்தர் நகல் (உண்மை நகல்) **பிவாசாஆ–13.** 12 ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு இராஜபாளையம் நகராட்சி வழங்கிய தீர்வை ரசீதுகள் (10 எண்ணிக்கை) **பிவாசாஆ–14 வரிசை.** 12 ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு இராஜபாளையம் நகராட்சி வழங்கிய குடிநீர் ரசீதுகள் (8 எண்ணிக்கை ) **பிவாசாஆ–15 வரிசை.** 12 ம் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு வழங்கப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (20 எண்ணிக்கை ) **பிவாசாஆ–16 வரிசை.** 12 ம் பிரதிவாதி தான் குடியிருக்கும் வீட்டை பொறுத்து இராஜபாளையம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவிற்கு எழுதி கொடுத்த Memorandum of deposit of title deeds பதிவு நகல் **பிவாசாஆ–17.** வாதி 12 ம் பிரதிவாதிக்கு எதிராக இராஜபாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண் 296/2019 ன் தீர்ப்பாணை சான்று நகல் **பிவாசாஆ–18.**

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

ஏற்கனவே அ.வ.எண் 13/1999 வழக்கில் வாதியின் அப்பாவிற்கு 1/3 பங்கும் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு 1/3 பங்கும் 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு 1/3 பங்கும் ஒதுக்கப்பட்டு அதில் 4 முதல் 7 பிரதிவாதிகளின் சொத்தை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த 1/3 பங்கு சொத்தில் தான் வீடு கட்டி அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான்.வாதியின் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட 1/3 பங்கு தனியாக காலிமனையாக கிடக்கிறது என்றால் சரிதான்.

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.

அந்த காலிமனையில் நான் உரிமைகோரவில்லை என்றால் சரிதான். 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட 1/3 பங்கு சொத்தை நடராஜன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நடராஜனும் அந்த சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் யாருக்கு எந்த பகுதி என்று ஒதுக்கப்பட்டு அந்த இறுதி நிலை தீர்ப்பாணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். பிவாசாஆ–18 ல் கண்ட வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பினர்கள்அல்ல என்றால் சரிதான்.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 24th day of January 2024.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

(ஓம்/) திருமதி.கஜரா ஆர்.ஜிஜி)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்.